மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி மட்டும் தானா கூடுதலாக வினா ஏதாவது கேட்கலாமே!

வினா எண் 30 திரு. இரா. புதுநயினார் ஆதித்தன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

30—

சேரன்மகாதேவி கன்னடியன் கால்வாய்

* 11743—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மாகாதேவி தொகுதி, கன்னடியன் கால்வாயின் நடுவே மணல் மேடுகள் அதிகம் இருப்பதால் தண்ணீர்ப் போக்குவரத்துத் தடைபடுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை நீக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தேசிய நீர் மேலாண்மைத் திட்டம் தாமிரபரணி உப திட்டத்தின் கீழ், கன்னடியன் கால்வாயில் மணல் மேடுகளை அகற்றும் பணி செய்யப்பட இருக்கிறது. இதற்காக பாளையங்கோட்டையில் உள்ள வேளாண்மைப் பொறியியல் துறையிலிருந்து 'புல்டோசர்' வாடகைக்கு எடுப்பதற்காக ரூ. 90,000 முன் பணமாக அரசுக்கு அளிக்கப்பட்டுள்ளது. அந்தத் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. வரும் ஏப்ரல் மாதம் அந்தப் பணி எடுத்துச் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறையில் எந்த அமைச்சரும் செய்யாத வியத்தகு சாதனைகள் பல புரிந்து, புரட்சித் தலைவி அவர்களுக்கு மேன்மேலும் புகழைச் சேர்க்கும் இந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

1993 பிப்ரவரி 9]

எங்களுடைய தொகுதியின் ஜீவாதாரப் பிரச்சினையான இந்த கன்னடியன் கால்வாயில், மணல் மேடு அகற்றுகின்ற பணிகள் இந்த ஏப்ரல் மாதத்திலே செய்து தருகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். மேலும் புயலின் காரணத்தினால் இந்த மணல் மேடுகள் அதிக அளவிலே ஏற்படுவது மட்டுமல்லாமல், அந்தக் கரைப் பகுதிகள் எல்லாம் உடைப்பு ஏற்பட்டு, தண்ணீர் எல்லாம் வீணாகச் செல்லுகின்ற நிலையிலே இருக்கிறது. இந்த ஜுன் 1-ந் தேதி விவசாயத்துக்காக தண்ணீரைத் திறக்கின்ற காலகட்டத்திற்குள் இந்த மணல் மேடுகளை அகற்றுகின்ற, அதே நேரத்தில் அந்த கரைப் பகுதிகளையும் சரி செய்து தருவார்களா என்பதோடு, அதனுடைய மடைகளையும் உலக வங்கி உதவியோடு சரி செய்து தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய மேலாண்மை நீர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழே பல்வேறு பணிகளை தாமிரபரணி உப திட்டத்திலேயும் செய்து கொண்டு இருக்கிறோம். இந்த கன்னடியன் கால்வாயை தூர் எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் வைத்த உடனேயே அதற்கான நிதியை ஒதுக்கி ஏப்ரல் மாதத்திலே பணி நடக்க இருக்கிறது என்பதை முதலிலேயே தெரிவித்தேன். அதுபோல பக்கவாட்டில் இருக்கின்ற கரைகளை பலப் படுத்தினால்தான் நீரை ஒழுங்காக சம்பந்தப்பட்ட பகுதி களுக்கு கொண்டு செல்ல முடியும் என்பதை இந்த அரசு அறியும். ஆகவே அதுபோன்ற பணிகளையும் இந்தப் பணியோடு சேர்த்து செய்வதற்கான பல திட்டங்கள் அரசிடத்திலே இருக்கிறது. கேள்வியிலேயே அதை விரிவாகச் சொல்ல முடியாது. ஆகவே அந்தத் திட்டம் செயல்படுத்தப் படும் என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மடைகளைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஒரு வார்த்தை கேட்டிருந்தேன். 173 மடை களும் பழுதுபட்டு இருப்பதனால் இதை சீர் செய்தால் நல்லது அந்தத் தண்ணீர் கடைசிக் குளமான கொத்தங்குளம் வரை வருவதற்கு மிகவும் சிரமப்படுகிறது. அதனால் உலக வங்கி உதவியுடன் அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தருவாரா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் நேற்றைக்குக் கூட கேள்வி நேரத்தின் போது தெரிவித்திருக்கிறேன். பல்வேறு நீர்ப்பாசன ஆதாரங்களையும் தமிழகத்திலே மேம்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் -நம்மிடத்திலே நிதி ஆதாரம் இல்லை என்ற காரணத்தினாலே -இன்றைக்கு உலக வங்கியை அணுகி 4 மாத காலத்திலே 804 கோடி ரூபாயை பெற்றுத் தந்திருக்கின்ற அந்த ஒப்பற்றத் தலைவி, புரட்சித் தலைவியினுடைய ஆட்சிக் காலத்தில் இது போன்ற பிரச்சினைகள் நிதி ஆதாரம் காரணமாக தடைபட்டு போகக்கூடாது என்பதற்காகத்தான் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே அந்தத் திட்டத்தை 5 ஆண்டு காலத்திற்கு செயல்படுத்த இருக்கிறோம். ஒவ்வொரு ஆண்டும் ஏறத்தாழ 170 கோடி ரூபாய் செலவழிக்க இருக்கிறோம் நம்முடைய நிதியைத் தவிர, இப்படிப்பட்ட திட்டங்களுக்கு, நிதி ஆதாரங்கள் இல்லாத திட்டங்களை எடுப்பதற்காகத்தான் அந்த புதிய திட்டம். ஆகவே இனி வரும் காலங்களில் இப்படிப்பட்ட பிரச்சினைகள் வருகின்ற போது ரெகுலராக கொடுக்கின்ற, அதாவது நாம் ஒதுக்கீடு செய்கின்ற, இந்த அலாட்மெண்டை தவிர, இந்தப் பணியிலே எடுத்துச் செய்வதற்கு பல வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே அடுத்த ஆண்டு முதல் இது மாதிரி பிரச்சினைகள் இருக்காது. நம்முடைய புரட்சித் தலைவியின் ஆட்சிக்காலத்திலே பாசன மேம்பாடுகள் அதிகரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 31, திரு. ஓ. எஸ். அமர்நாத், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

31—

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட சாலைகளைச் சீரமைத்தல்.

*9364—திரு. ஓ. எஸ். அமர்நாத் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாநகராட்சிக்குட்பட்ட சாலைகள் மிகவும் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) அச்சாலைகளைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?